## விஜய குமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலை சபை - 2018

---

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

விஜய குமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலை சபையின் (“சபை”) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வைத்தியசாலை சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வைத்தியசாலை சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வைத்தியசாலை சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வைத்தியசாலை சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- வைத்தியசாலை சபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வைத்தியசாலை சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறித்த நியமங்கள் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஓய்வூதிய நன்மைகளின் பொறுப்பு தொடர்பான ரூபா 6,921,869 நேர்மறையான காசுப் பாய்வொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான ரூபா 19,042,601 தொகையான இரண்டு எதிர்மறையான காசுப்பாய்வுகளும் ரூபா 506,833 தொகையான சீராக்கங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவ்வாறான பெறுமதிகளின் துல்லியத்தன்மை உறுதிப்படுத்தப்படவில்லை. | முன்னாள் கணக்காளரினால் 2017 ஆம் ஆண்டிலும் முந்தைய ஆண்டுகளிலும் தவறான பெறுமதிகளை உள்ளிடுவதன் மூலம் காசுப்பாய்ச்சல் கூற்றானது சமப்படுத்தப் பட்டிருந்தது. திட்டவட்டமான பதிலொன்றை கொடுப்பது கடினம் ஏனென்றால் அவர் தற்போதைக்கு சேவையிலிருந்து பதவி நீக்கப்பட்டுள்ளார். 2019 ஆம் ஆண்டில் காசுப் பாய்வை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், காசுப்பாய்ச்சல் கூற்றானது காசுப்பாய்வின் தன்மையினை சரியாக பிரதிபலிக்கக் கூடிய வகையிலும் காசுப்பாய்வினை தெளிவாக அடையாளம் காண இயலுமான வகையிலும் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 3 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம், வழு இடம்பெற்ற காலப்பகுதியில் முன்வைக்கப்பட்ட ஒப்பிடக்கூடிய தொகைகளை மீள எடுத்து வைப்பதன் மூலம் அவற்றை கண்டுபிடித்து, கடந்தகால பொருண்மையான வழுக்களை நிதிக்கூற்றுக்களின் முதல் தொகுப்பில் பின்னோக்கிய நடைமுறையில் சரிசெய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறு செய்யாமல், 2018 சனவரி 01 இல் உள்ளவாறு முந்தைய ஆண்டு சீராக்கம் என முன்கொண்டு வரப்பட்டிருந்த திரண்ட இலாபத்திற்கு ரூபா 739,212 தொகையொன்று சீராக்கப்பட்டிருந்தது. | அவ்வாறான வழுக்களை எதிர்காலத்தில் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கடந்த கால வழுக்கள் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம், ரூபா 113,682,114 பெறுமதியுடைய சொத்துக்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த சொத்துக்கள் இன்னும் பயன்பாட்டில் உள்ளன. ஏனென்றால் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் சரியான நேரத்தில் மீளாய்வு செய்யப்படவில்லை. இலங்கை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் அதன் மீதான மதிப்பிடப்பட்ட வழுவினை சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தற்காலிகமாக செயல்படாத மற்றும் செயலில் இருந்து ஓய்வு பெற்றிருந்ததுமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை அடையாளம் காண்பதற்கும் அந்த சொத்துக்களின் நியாய பெறுமதியினை முன்வைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வழுவினை சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். சொத்துப் பதிவேட்டினை தயாரிப்பதற்கான முறையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் வைத்திய சாலை தொடங்கியதில் இருந்தான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை பரீட்சிப்பதன் மூலமும் தொடர்புடைய சொத்துக்களை அடையாளம் காண்பதன் மூலமும் பதிவேடொன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருந்த இன்னும் பயன்பாட்டில் உள்ள நடைமுறையல்லா சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து கணக்குகளில் எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்களின் தேய்மானம் அவ்வாறான சொத்துக்கள் பயன்படுத்துவதற்கு தயாராகின்ற போது தொடங்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், தேவைப்பாடுகளுக்கு முரணாக, கொள்வனவு செய்த திகதி மற்றும் அகற்றல் செய்த தகதி என்பவற்றை கருத்தில் கொள்ளாமல் கொள்வனவு செய்த ஆண்டிற்கு தேய்மானம் செய்தல் மற்றும் அகற்றல் செய்த ஆண்டிற்கு தேய்மானம் செய்யாமை என்ற கொள்கையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. | வழுவினை சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம், சொத்துக்களின் தேய்வு கொள்கையொன்று அங்கீகரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2010 ஆம் ஆண்டு முதல் நன்கொடையாக பெறப்பட்டிருந்த 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 12,876,545 கிரயமான நிலையான சொத்துக்கள் தொடர்பிலான முந்தைய 8 ஆண்டுகளினதும் மீளாய்வாண்டினதும் தேய்வுகள் முறையே ரூபா 4,284,762 மற்றும் ரூபா 1,884,381 ஆக இருந்த போதிலும், நன்கொடைக் கணக்கில் இதேபோன்று தொகையினை ஒழுங்குமுறையாக பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நன்கொடைகளாக பெறப்பட்ட சொத்துக்கள் தற்போது வரை தேய்வு செய்யப்படவில்லை மற்றும் இந்த வழுவானது எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | வழுவினை சரி செய்ததன் பின்னர் கணக்குகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 4 செலவின விடயங்கள் தொடர்பான ரூபா 1,016,934 தொகையான அட்டுறு செலவு மற்றும் அத்திகதியில் உள்ளவாறான ரூபா 80,000 தொகையான அட்டுறு சிற்றுண்டிச்சாலை வருமானம் என்பன கணக்குகளில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த வழு எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | - மேற்படி - |
| (இ) மீளாய்வாண்டிற்கான ரூபா 44,188 தொகையான இயந்திரத்தின் தேய்மானங்கள் மற்றும் ரூபா 126,000 தொகையான கணினிகளின் தேய்மானம் என்பன கணக்குகளில் குறைத்து குறிப்பிடப்பட்டிருந்தன. | இந்த வழு எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | - மேற்படி - |
| (ஈ) 2018திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15 ஊழியர்கள் சார்பான ரூபா 698,157 தொகையான பணிக்கொடை ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இந்த 15 ஊழியர்களும் சமயாசமய (casual) ஊழியர்களாக கருதப்பட்டதுடன் பணிக்கொடை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வில்லை மற்றும் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட அறிவுறுத்தல்களின் | வழுவினை சரி செய்ததன் பின்னர் கணக்குகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரகாரம் ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (உ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மருந்துகளினதும் சத்திர சிகிச்சை பொருட்களினதும் ECG பொருட்களினதும் மற்றும் பல் (Dental) சத்திரசிகிச்சை பொருட்களினதும் பெறுமதி ரூபா 4,618,856 ஆல் குறைத்து குறிப்பிடப்பட்டிருந்தது மற்றும் பொதுவான களஞ்சிய பொருட்கள், நிலையான மற்றும் பேணும் இருப்புக்கின் பெறுமதியானது ரூபா 213,759 ஆல் மிகையாக குறிப்பிடப்பட்டிருந்தது. | களஞ்சிய புத்தகங்களில் சோதனை செய்ததன் பின்னர் விடயத்தை சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | - மேற்படி - |

**1.6 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

-----------------------------------------------------------------------------------------------------------

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்தவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1999 இன் 38 ஆம் இலக்க விஜயகுமார துங்க ஞாபகார்த்த வைத்தியசாலை சபைச்சட்டம் | | | |
| (i) பந்தி (iii) இன் உப பிரிவு 3.1 | விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவ வல்லுனர்களிடையே இருந்து நபரொருவர் வைத்தியசாலை சபையின் அங்கத்தவராக நியமிக்கப்படவில்லை. | வைத்தியசாலையின் பணிப்பாளரின் ஒப்பந்த காலம் முடிவடைந்தமை காரணமாக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த வெற்றிடம் காணப்படுகின்றது. | வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியசாலை சபையின் அங்கத்தவர் இல்லை. ஆகவே, சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வைத்தியசாலை சபையின் அங்கத்தவர்கள் நியமிக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | பந்தி (v) இன் உப பிரிவு 3.1 | விஜய குமாரதுங்க ஞாபகார்த்த அறக்கட்டளையை பிரதிநிதித்துவப்படுத்தும் 4 அங்கத்தவர்களும் குறிப்பிட்ட அறக்கட்டளையால் பெயரிடப்பட்டவர்களும் வைத்தியசாலை சபையின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட வேண்டிய போதிலும், வைத்தியசாலை சபையின் அங்கத்தவர்களாக குறிப்பிட்ட அறக்கட்டளையை பிரதிநிதித்துவப்படுத்தும் 5 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | சட்டத்தின் உப பிரிவு 3(1)(v) இன் பிரகாரம் முன்னாள் சனாதிபதி திருமதி.சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, பேராசிரியர் கார்லோ பொன்சேகா, திரு. சந்திரா விக்கிரமசிங்க மற்றும் திரு.ஆனந்த விமலசேன ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்த னர் மற்றும் உப பிரிவு 3(1)(iv) இன் பிரகாரம் திரு.உமாகிலிய குறிப்பிட்ட தொழிலில் நிபுணராக நியமிக்கப்பட்டார். | வைத்தியசாலை சபையின் அங்கத்தவர்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமிக்கப்பட்டிருக் கவில்லை. ஆகவே, சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வைத்தியசாலை சபையின் அங்கத்தரவ் நியமிக்கப்படல் வேண்டும். |
| (iii) | உப பிரிவு 5.1 | வைத்தியசாலை சபையின் கூட்டங்கள் மாதமொன்றில் ஒரு தடவையாவது நடத்தப்படல் வேண்டுமென்ற போதிலும், 2018 இல் 3 கூட்டங்கள் மாத்திரம் நடத்தப்பட்டிருந்தன. | முன்னாள் தவிசாளரின் மரணம் மற்றும் வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளரின் ஒப்பந்தம் நிறைவுற்றமை காரணமாகவும் கூட்டங்களை நடத்தாமைக்கான காரணங்களை கண்டறிய முடியவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கூட்டங்களை நடத்துவதற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (iv) | பிரிவு 7 | வைத்தியசாலை சபைச் சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருந்த சீதுவையில் அமைந்துள்ள காணியின் உரிமையினை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் 2018 திசெம்பர் வரைக்கும் கூட எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வைத்தியசாலைக்கு சபைக்கு அறிவித்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | காணியின் உரிமையினை வைத்தியசாலை சபைக்கு மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (v) உப பிரிவு 10(1) மற்றும் 10(2) | வைத்தியசாலை சபையினால் தீர்மானிக்கப்பட்ட அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளை ஒப்படைப்பதன் மூலம் வைத்தியசாலையின் அன்றாட நடவடிக்கைகளை நிருவகிப்பதற்கான முகாமைத்துவ குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 யூலை 08 அன்று முகாமைத்துவ குழுவொன்று நியமிக்கப்பட்டது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்களின் நிதிப்பிரமாணம் 702(3) | பராமரிப்பு மற்றும் சுத்தம் செய்தல், உணவு மூலப்பொருள் வழங்கல் பாதுகாப்பு சேவை மற்றும் சலவை சேவைகள் உள்ளடங்கலான ரூபா 18,099,909 மொத்த பெறுமதியைக் கொண்ட ஒப்பந்த உடன்படிக்கையின் பிரதிகள் கையொப்பமிடப்பட்ட உடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டல் வேண்டுமென்ற போதிலும், இந்த அறிக்கையின் திகதி வரைக்கும் கூட அது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 செப்தெம்பர் 19 அன்று உடன்படிக்கைளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டன. | பல்வேறு சேவைகளை வழங்குவதற்கான உடன்படிக்கையில் நுழையும் போது உடன்படிக்கைகளின் பிரதிகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு உடனடியாக சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | 2015 மே 28 ஆந் திகதியிடப்பட்ட சுகாதாரம் போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் பொதுச் சுற்றறிக்கை இல - 01/21/2015 | (i) சுற்றறிக்கையின் பந்தி 5.1.3 மற்றும் 5.1.4 இன் பிரகாரம் வாராந்த உணவுத் திட்டத்தினை தயாரித்து தொடர்புடைய பிரிவுகளுக்கு தயாரிக்கப்பட்ட வாராந்த உணவுத் திட்டத்தினை வழங்குதல் மற்றும் காய்கறிகளை வழங்கல் செய்வதற்கான மாதாந்த திட்டத்தினை தயாரித்தல் என்பவைகளுக்கு உணவு முகாமைத்துவ குழுவின் உதவியினை பெற்றுக் கொள்வதற்கு நிறுவனத்தின் தலைவரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உணவு முகாமைத்துவ குழுவின் உதவியுடன் 2019 செப்தெம்பர் முதல் வாராந்த மற்றும் மாதாந்த உணவுத் திட்டம் என்பன தயாரிக்கப் படுகின்றன. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ii) | சுற்றறிக்கையின் 8.1.1, 8.1.4 மற்றும் 8.1.4 ஆம் பந்திகளின் பிரகாரம், ஒவ்வொரு மாததத்தினதும் 1 ஆம் நாள் அன்று வதிவுள்ள நோயாளிகளுக்கான விடுதிக்கான சுகாதாரம்-31 வடிவத்தில் புதிய உணவுச் சுற்று பத்திரமொன்றை தயாரிப்பதற்கும், தொடர்புடைய உத்தியோகத்தர்களால் தலைமாட்டு (Bed Head) அனுமதிச்சீட்டினை பரீட்சிப்பதன் மூலம் உரிய உணவினை உணவுச் சுற்று பத்திரத்தில் பதிவு செய்வதற்கும், ஒவ்வொரு நோயாளியினதும் உணவுச் சுற்றுக்களை சுருக்கிக் கூறுவதன் மூலம் நாளுக்கு தேவையான உணவு சுற்றுக்களை கணக்கிடுவதற்கும், மற்றும் இருக்கும் நோயாளிகளுடன் இணக்கம் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | சுகாதாரம் - 31 வடிவத்தை தயாரிப்பதற்கு எழுதுவினைஞர் இல்லை. ஆகவே அந்த நேரத்தில் அது தயாரிக்கப்பட வில்லை. மற்றும் எழுதுவினைஞர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (iii) | சுற்றறிக்கையின் 10.5 மற்றும் 11.7 பந்தியின் பிரகாரம், சமைத்த உணவுக் கழிவுகளின் தேடுதலின் பின்னர் குறித்தளவு சதவீதத்தில் மூல உணவின் கட்டளைகளை குறைப்பதற்கும் வைத்தியசாலையின் தலைமைக்குரிய அத்தியாவசிய கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களை அறிவிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அத்தியாவசிய புலனாய்வுகள் மாதிரி அடிப்படையில் மேற்கொள்ளப் படுகின்றது. | அமைச்சால் விநியோகிக்கப் பட்ட பொதுச் சுற்றறிக்கையில் பின்பற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iv) சுற்றறிக்கையின் 14.1, 15.1 மற்றும் 15.3 ஆம் பந்தியின் பிரகாரம், சமைத்த உணவுகளை விநியோகிப்பதற்கு முன்னர் மாதிரிகளை காட்டுவதற்கும் மிகுதி உணவானது உணவு அட்டையை பெற்ற ஊழியர்களுக்கு வழங்கப்படும் போது என்பனை உறுதிப்படுத்து வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஊழியர் உணவு அடிப்படை முறையானது 2019 செப்தெம்பர் இலிருந்து அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

---------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 45,732,117 தொகையான மிகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 14,269,158 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 31,462,959 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. அரசாங்க மானியம் ரூபா 45,920,000 அதிகரித்திருந்தாலும், செலவினங்களை ரூபா 17,886,115 மட்டுமே அதிகரிப்பதே முன்னேற்றத்திற்கான காரணமாக காணப்படுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மதிப்பீடு செய்யப்படாத 71 மருத்துவ விநியோக பிரிவுகளில் 937,258 அலகுகள் மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,519,607 தொகை விதிக்கப்பட்டுள்ளது. ரூபா 55,494,999 என மதிப்பிடப்பட்ட 192 வகை மருத்துவ விநியோகங்களில் 4,519,611 அலகுகள் அந்த பிரிவில் இருந்து வாங்கப்படவில்லை, மேலும் 60 வகை மருத்துவ பொருட்களிலிருந்து 3,360,790 அலகுகளை வாங்குவதாக மதிப்பிடப்பட்டிருந்தாலும், அதில் 947,251 அலகுகள் மட்டுமே பிரதி நிதித்துவப்படுத்துகின்றன 28 சதவீதம் கொள்வனவு செய்யப்பட்டன. மேலும் 85 | வருடாந்த மதிப்பீட்டில் 71 மருந்து மற்றும் அறுவை சிகிச்சை பொருட்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்று கணக்காய்வு வினாவில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், மருத்துவமனையின் முழு விநியோகத் தேவை உள்ளிட்ட மதிப்பீடு ஆண்டுதோறும் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. அறுவைசிகிச்சை பொருட்கள் மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டன. அதிகப்படியான விநியோகத்தைப் பெறுவதன் விளைவாக எதிர்பார்த்த அளவைத் தாண்டி சிகிச்சைகள் செய்யப்பட வேண்டியிருந்தது. நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க எதிர்பாராத | யதார்த்தமாக ஆண்டிற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மருத்துவ விநியோக பிரிவுகளில் 4,370,769 அலகுகளை வாங்குவதாக மதிப்பிடப்பட்டுள்ளது, அந்த பிரிவில் இருந்து 5,741,364 அலகுகளை வாங்கப்பட்டுள்ளன, மதிப்பீட்டில் கொள்வனவுத் தொகை 31 சதவீதம் காணப்பட்டன. | தேவை இருந்தது. எனவே மீதமுள்ள 10 வகை மருத்துவம் மற்றும் அறுவைசிகிச்சை வழங்கப்பட்டன, மருத்துவ சப்ளை பிரிவு 192 வகை மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை ஆகியவற்றை தேவையான இடங்களில் வழங்கவில்லை. | |
| (ஆ) | ரூபா 23,044,956 செலவில் மருந்து மற்றும் அறுவை சிகிச்சை பொருட்கள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடமிருந்து மதிப்பீடுகள் தயாரிக்கமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | கருத்து தெரிவிக்ககவில்லை. | யதார்த்தமாக ஆண்டிற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | வைத்தியசாலை சபையின் 5 நோயாளி விடுதிகள் ரூபா 3,932,503 செலவில் அறுவை சிகிச்சை பொருட்கள் மற்றும் 51 மருந்துகள் தொடர்பான 1225 அலகுகள் இருப்புக்கள் அதிகமாக இருப்பது பௌதீக இருப்பு கணிப்பீட்டினை மெய்மையாய்வு செய்யும் பொழுது தெரியவந்துள்ளது. இந் நிலைமைக்கான காரணத்தைக் கண்டறியவும், தேவையான தீர்வுகளைப் பயன்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பௌதீக இருப்பு துல்லியமாக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், கணனி மூலம் இருப்பு மெய்மையாய்வு அறிக்கை தயாரிப்பதில் தவறுகள் காணப்பட்டன. | தவறுகள் தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். அதை பொருத்தமாக சரிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |
| (ஈ) | ஊழியர் நம்பிக்கை நிதிக்கான பங்களிப்பு 2005 முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 55 ஊழியர்களுக்கு உரிய காலத்திற்குள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே ரூபா 286,718 மிகை அறவீடுகள் செலுத்த வேண்டியிருந்தது. | 2005 முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கு ஊழியர் நம்பிக்கை நிதிக்கான பங்களிப்பு செலுத்தப்படாததால் அவர்களுக்கு பணம் செலுத்த வேண்டியிருந்தது. அதன்படி மிகை அறவீடு செலுத்த வேண்டியிருந்தது. | கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஊழியர்கள் நம்பிக்கை நிதியத்திற்கு அதிகாரிகளின் அலட்சியம் காரணமாக பங்களிப்பு செய்யப்படாததினால் மிகை அறவீடு செலுத்த வேண்டியிருந்தது. எனவே இந்த இழப்பை பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) நிதி முகாமையாளரினை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்களை கோரப்பட்டிருந்தன பத்திரிகைகளில் அறிவிப்பு வெளியிடப்பட்டது, அதில் வைத்தியசாலை சபைக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளுக்குள் அவை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அத்தகைய பதவியின் தேவை மற்றும் பதவிக்கு தொடர்புடைய கடமைகள் மருத்துவமனையால் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரம் பெறப்பட்டிருக்கவில்லை, எனவே பத்திரிகை அறிவிப்பிற்காக ரூபா 139,080 தொகை பயனற்றதாக காணப்படுகின்றது. | முன்னாள் கணக்காளரை பதவி நீக்கம் செய்ததால் அங்கீகரிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை பதவிக்கு நியமிக்கப்பட வேண்டியிருக்கின்றது. உதவி பணிப்பாளர் (நிதி) பதவியை கணக்கியல் பதவியை விட உயர்ந்ததாக உருவாக்குவது மேன்மையானது என்று முகாமைத்துவ சபையினால் இனங்காணப்பட்டிருந்தன. சபையினால் மருத்துவமனையின் நிர்வாகத்திற்கு சாதகமான அனைத்தையும் அதிகாரத்தினையும் மற்றும் வைத்தியசாலை சபைச்சட்டத்தால் வழங்கப்பட்ட ஏற்பாட்டின் படி நிதி முகாமையாளர் / உதவி பணிப்பாளர் (நிதி) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன்கூட்டிய அனுமதிகளுக்குட்பட்டு விளம்பரம் வெளியிடப்பட்டது. | புதிய ஊழியர்கள் மற்றும் மேலதிக ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். அத்திணைக்களத்தின் முன்கூட்டிய அனுமதிகளுக்குட்பட்டு பொது விளம்பரப்படுத்தல் விடயங்கள் அல்லது ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆத்தகைய பயனற்ற செலவினங்களை பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

**3.2 குறைப்பயன்பாடுடைய நிதியங்கள்**

-----------------------------------------------------------

| **கணக்காய்வு பிரச்சினை** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மூலதன செலவினங்களுக்காக பொது திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட நிதியைப் பயன்படுத்துவது பலவீனமான நிலையில் இருந்தது. பெறப்பட்ட நிதியில், 2018 ஜனவரி 01 ஆம் திகதியின் படி ரூபா 28,861,901 தொகை சேமிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் ரூபா 39,100,000 தொகை பெறப்பட்டது, அதில் ரூபா 19,543,123 மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன்படி 2018 திசெம்பர் 31 இல் ரூபா 48,418,778 சேமிப்பாக காட்டப்பட்டிருந்தன. | புதிய கட்டடம் மற்றும் வழங்கல் மற்றும் புதிய ஜெனரேட்டரை பொருத்துதல் மற்றும் மருத்துவ சாதனங்களை கொள்வனவு செய்வதற்கான பெறுகை தொழில்நுட்ப மதிப்பீட்டின் தாமதம் ஆகியவற்றால் 2018 ஆம் ஆண்டிற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. 2019 ஆம் ஆண்டில் ஏற்பாடுகள் திறம்பட பயன்படுத்தப்படும். | பொது திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு பிரச்சினை | | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டில் வைத்தியசாலை சபையின் பராமரிப்பு மற்றும் துப்புரவு மற்றும் சலவை சேவைக்காக மொத்தம் ரூபா 7,182,892 செலவிடப்பட்டுள்ளது. இந்த 2 பெறுகை செய்வதற்கு வழங்குனர் தேர்ந்தெடுக்கும் போது அரசாங்க பெறுகை வழிகாட்டி 2.3.2, 2.11.3, 4.3.1, 6.3.6 மற்றும் 6.3.3 ஆகியவற்றின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | | |
| | (i) | பெறுகை தொடர்பான கட்சிகளுடன் தேவையான தகவல்தொடர்புகளைப் பேணுவதற்கும், தேவையான தரவு மற்றும் தகவல்களைச் சேகரிப்பதற்கும், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடம் சமர்ப்பிக்கவும், மதிப்பாய்வுகளைத் தயாரிக்கவும், விவரக்குறிப்புகள் உள்ளிட்ட விலைமனு ஆவணங்களை அங்கீகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. விலைமனு திறத்தல் அறிக்கைகள், விலைமனு மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் பெறுகை குழு அறிக்கைகள் குறிப்பிட்ட வடிவமைப்பின் படி தயாரிக்கப்படவில்லை. அதனுடன் தொடர்புடைய அனைத்து செலவினங்களுடனும் கூடிய மொத்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை. | 2019 ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிகளுக்கமைய தொழில் நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கை மற்றும் பெறுகை குழு தீர்மான அறிகைகள் தயாரிக்கப்பட்டுள்ளன மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்தன. | அரசு பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| | (ii) | சுத்தம் செய்ய பயன்படுத்தப்படும் இரசாயனங்களின் தரம் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படவில்லை. கேள்விதாரரின் பயன்படுத்தும் இரசாயனங்களுக்கு உத்தரவாதம் பெறப்படவில்லை. | 2018 ஆம் ஆண்டில் தொற்று கட்டுப்பாட்டு பிரிவுக்கு ஒரு நிரந்தர தாதியர் நியமிக்கப்படவில்லை. எனவே இரசாயனங்களின் நியாயமான தரத்தை சோதிக்க முடியவில்லை. | சுத்தம் செய்ய பயன்படுத்தப்படும் இரசாயனங்களின் நியாயாமான தரத்தை கேள்வி ஆவணங்களில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும் மற்றும் சுத்தம் செய்ய பயன்படுத்தப்படும் நியாயமான தரத்திற்கான ஒரு |

| | | | |
|---|---|---|---|
| | | | உத்தரவாதத்தினை கேள்விதாரரிடமிருந்து பெறப்பட வேண்டும். |
| (iii) | சுத்தம் செய்வதற்கான சேவை உடன்படிக்கையின் பிரிவு 10 இன் படி, 15 தொழிலாளர்கள் மற்றும் 12 மேற்பார்வையாளர்கள் ஒரு நாளைக்கு 12 மணி நேரம் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும், ஒரு ஊழியரை 24 மணி நேரத்திற்கு மேல் சேவையில் ஈடுபடுத்தக்கூடாது. எவ்வாறாயினும், 2018 சனவரி 01 முதல் ஒக்டோபர் 31 வரையிலான காலகட்டத்தில் 45 நிகழ்வுகளில் 24 மணி நேரத்திற்கும் மேலான சேவையை துப்புரவு ஊழியர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றது. மேலும் 188 நிகழ்வுகளில் பணியாளர்கள் உரிய ஊழியர்களைக் காட்டிலும் குறைவாகவே பணியமர்த்தப்பட்டனர். | 24 மணி நேரத்திற்கும் மேலாக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட நிகழ்வுகளில் அபராதம் மற்றும் ஒரு நாளைக்கு சம்பளம் மீட்கப்பட்டு, பணியாளர்களை உரிய தொகையை விட குறைவாக பணியில் ஈடுபடுத்தப்படுகின்றது. | அபராதம் மற்றும் ஒரு நாள் சம்பளத்தை மீட்டெடுப்பது போதாது, ஏனென்றால் பணியாளர்களை உரிய தொகையை விட குறைவாக பணியில் ஈடுபடுத்தப்படும் போது சேவையை சரியாகப் பெற முடியவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரரிடமிருந்து கடமையை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (iv) | சுத்திகரிப்பு சேவை உடன்படிக்கையின் பிரிவு 18 இன் படி, ஒப்பந்தக்காரரால் வழங்கப்பட வேண்டிய இரசாயனங்கள் உரிய தொகையில் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2018 சனவரி 01 முதல் ஒக்டோபர் 31 வரையிலான காலகட்டத்தில், 1 லிட்டரிலிருந்து 20 லிட்டர் வரையிலான 13 வகை இரசாயனங்கள், 2 பாட்டில்கள் முதல் 50 பாட்டில்கள், 06 கிலோகிராம் மற்றும் 10 துண்டுகள் மூலம் இரசாயனங்கள் உரிய தொகையை விட குறைவாக வழங்கப்பட்டன. | 2018 ஆம் ஆண்டில் தொற்று கட்டுப்பாட்டு தாதியர்கள் நியமிக்கப்படாததால் கடமையை நியமிக்க எந்த அதிகாரியுமில்லை. இருப்பினும் 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட இரசாயனங்கள் தனி பதிவேட்டில் பதியப்பட்டிருந்தன. தொற்று கட்டுப்பாட்டு தாதியர்கள் 2019 ஆம் ஆண்டிலிருந்து இரசாயனங்களின் தரத்தை பரிசோதித்து குறைந்த வழங்கல் செய்யப்பட்ட இரசாயனங்களுக்கான மாதாந்த பட்டியல்களிலிருந்து குறைப்பு செய்யப்பட்டது. | சேவையின் சரியான தரத்தை பூர்த்தி செய்ய குறைந்த அளவு இரசாயனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் மாதாந்த விலை பட்டியல்களிலிருந்து குறைத்தல் போதுமானதாகவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் சேவையை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (v) | சுத்திகரிப்பு சேவை உடன்படிக்கையின் பிரிவு 13 (i) இன் படி, ஒவ்வொரு பிரிவினரிடமிருந்தும், நோயாளர் விடுதிக்குப் பொறுப்பான அதிகாரிகளிடமிருந்தும் சான்றிதழ் | சனவரி 2018 முதல் ஒக்டோபர் 2018 வரையிலான காலப்பகுதியில் உடன்படிக்கையின் பிரகாரம், சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாத பிரிவுகள் | சேவை திருப்தி அடைந்ததை உறுதிப்படுத்த ஒவ்வொரு பிரிவிற்கும் பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | பெறப்பட வேண்டும் மற்றும் மாதாந்த பட்டியல்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கூறப்பட்ட சான்றிதழ்கள் பெரும்பாலான பிரிவுகளிலிருந்து பெறப்படவில்லை என்றாலும், மீளாய்வாண்டில் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 6,477,696 தொகை அந்தத் தேவையை கருத்தில் கொள்ளாமல் செலுத்தப்பட்டது. | தொடர்பான கொடுப்பனவுகளில் இருந்து கழிவுகள் செய்யப்பட்டன. இந்த நிலைமை 2019 ஆம் ஆண்டில் சரி செய்யப்பட்டது. | பெறப்பட்ட சான்றிதழ்களில் மட்டுமே பணம் செலுத்துவதற்கான ஒரு வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | வைத்தியசாலை சபையத்திற்கு பாதுகாப்பு பெறுவதற்கான பாதுகாப்பு சேவை உடன்படிக்கையின் பிரிவு 07இன் பிரகாரம், பெண்கள் பாதுகாப்பு காவலர்களை பகல் நேரத்தில் மட்டுமே நிறுத்த வேண்டும். ஆயினும்கூட, 191 நாட்களில் 10 பெண்கள் பாதுகாப்பு காவலர்கள் இரவு நேரங்களில் நிறுத்தப்பட்டனர். | தாதியர் விடுதிகளில் எதிர்பாராத பிரச்சினைகள் காரணமாக 2018 ஆம் ஆண்டில் ஒரு பெண் பாதுகாப்பு காவலர் நிறுத்தப்பட்டார் மற்றும் உடன்படிக்கை 2019 ஆம் ஆண்டிலிருந்து திருத்தப்பட்டது. | பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கான உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் வைத்தியசாலை சபைகளின் மூல உணவுகளை வழங்குவதற்காக ரூபா 4,801,422 தொகை விதிக்கப்பட்டுள்ளது.<br><br>அரச பெறுகை வழிகாட்டி 2.11.3, 2.12 (அ), 3.12.2, 5.3.1 மற்றும் 5.3.2 ஆகியவற்றின் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன. | | |
| | (i) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை மற்றும் கேள்வி மதிப்பீட்டு சுருக்க அறிக்கை ஆகியவை உரிய மாதிரியின் படி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தவறுகள் 2019 ஆம் ஆண்டிலிருந்து சரி செய்யப்பட்டன. | அரசு பெறுகை வழிகாட்டுதலின் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இது போன்ற தவறுகள் எதிர்கால பெறுகை செய்வதில் சரி செய்யப்படல் வேண்டும். |
| | (ii) பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களால் உரிய அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (iii) | ஒப்பந்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான கேள்விதாரர்களின் திறனை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள் முறையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் தகுதிக்கு முன்னைய சோதனைகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (iv) | பெறுகை நிறுவனம் பயன்படுத்தும் கேள்வி ஆவணங்களின் பொருத்தமான தன்மை பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரிசோதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (v) | வெற்றிகரமான கேள்விதாரருடன் கிடைக்கக்கூடிய திறனை நேரடியாக உறுதிப்படுத்துவதற்கான அளவுகோல்கள் மற்றும் தகுதி தேவை போன்ற கேள்விகளைத் தயாரிப்பதற்குத் தேவையான ஆரம்பத் தகவல்கள் ஆகியன உள்ளடக்கப்பட்டு கேள்வி அழைப்புகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த தவறுகள் 2019 ஆம் ஆண்டிலிருந்து சரி செய்யப்பட்டன. | அரசு பெறுகை வழிகாட்டுதலின் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இது போன்ற தவறுகள் எதிர்கால பெறுகை செய்வதில் சரி செய்யப்படல் வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆந் திகதியடப்பட்ட பிஈடி/12 ஆம் இலக்க பொதுதொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 9.3.1 இன் படி ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் எந்தவொரு பதவிக்கும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மருத்துவமனைக்கான குறிப்பிட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தினை தயாரிப்பதில் பல்வேறுபட்ட சிக்கல் செயன்முறைகள் காணப்படுகின்றன. இது தயாரிக்கப்படும் வரை, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியுடன் அரசாங்க ஆட்சேர்ப்பு திட்டத்தின் படி ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு செய்யப்படுகின்றன. | பொதுதொழில் முயற்சிகள் அறிவுறுத்தல்களின்படி, ஊழியர்களின் ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் இறுதி வரை நோயாளர் பாரமரிப்புடன் நேரடியாக தொடர்புடைய 06 முக்கிய பதவிகள மற்றும் 18 வெற்றிடங்களை நிரப்ப | தகுதிவாய்ந்த அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதில் பல சிக்கல்கள் உள்ளன, | விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்கப்படாத அமைச்சகத்துடன் கலந்துரையாடி ஒரு |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஏனெனில் அமைச்சியால் வழங்கிய சலுகைகள் வைத்தியசாலை சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை, பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்த போதிலும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களினால் விண்ணப்பம் வழங்கப்படாததால் ஆட்சேர்ப்பு தாமதமானது. 2019 ஆம் ஆண்டில் நான்கு மருத்துவ அதிகாரிகள் மற்றும் ஒரு சிறப்பு தர தாதியர் ஆகியோர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். | தீர்வுக்கு வர வேண்டும். |
| (இ) | 2018 நவம்பர் தொடக்கம் 2019 யூலை வரையான காலப்பகுதிக்கு பணிப்பாளர் சபையின் செயலாளர் பதவிக்கு ரூபா 30,000 மாதாந்த கொடுப்பனவாக ரூபா 272,000 சுட்டுமொத்த தொகையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பெண் உத்தயோகத்தரின் பதவியணிக்கான அனுமதியானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெறப்படாமையினால் அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 30,000 கொடுப்பனவு மேற்கொண்டு செயலாளரின் கடமைக்கு ஒருவரை நியமிப்பதற்கு பணிப்பாளர் குழு தீர்மானித்திருந்தது. வைத்தியசாலை சபையின் சட்டத்திற்கமைய நிர்வாக அதிகாரங்கள் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்படுகின்றன. | வைத்தியசாலை சபையின் பதவியணிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | முகாமைத்துவ உதவியாளரின் ஆட்சேர்ப்புத் திட்டத்தைத் தொடர்ந்து வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையினை நடத்தாமல் 2013 திசெம்பர் 10 அன்று உதவி மருத்துவ பதிவாளர் பதவிக்கு ஒரு கீழ் நிலை தர அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் ஒரு போட்டி பரீட்சையில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதுடன் மற்றும் போதுமான விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்கப்படாததினால் நேர்முகத்தேர்வினால் மட்டுமே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. | அரசாங்க ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் பின்பற்றப்பட்டால், அந்த ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 1979 ஆம் இலக்க அமைச்சின் பொது சுற்றிக்கைக்கு மாறாக 12 நவம்பர் 2018 ஆம் திகதி வரை 12 நாட்களுக்கு மேலாக 03 மருத்துவ உத்தியோகத்தரினால் உத்தியொக பூர்வ நாட்குறிப்பு பேணப்பட்டிருக்கவில்லை. தூபண விதிக் கோவையிக் அத்தியாயம் XLVIII இன் படி 2018 திசெம்பர் 31 வரை இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படடிருக்கவில்லை. | உத்தியோகபூர்வ நாட்குறிப்புகளை பராமரிப்பதற்காக சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகளுக்கு எச்சரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டன, தற்போது அதிகாரப்பூர்வ நாட்குறிப்புகள் சரியாக சரிபார்க்கப்படுகின்றன. | உத்தியோகபூர்வ நாட்குறிப்புகளை பராமரிக்க அமைச்சின் பொது சுற்றறிக்கைகள் வழங்கிய வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். தூபன விதிக்கோவையின் படி கூறப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றாத அதிகாரிகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு பிரச்சினை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 யூன் 2003 திகதியிடப்பட்ட பிஈடி / 12 ஆம் இலக்க பொதுதொழில் முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை மற்றும் 24 பெப்ரவரி 2004 ஆந் திகதியிடப்பட்ட 01/2004 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதியச்சட்ட சபைகளின் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 23 செப்டம்பர் 2019 அன்று 207 நாட்கள் தாமதமாக வழங்கப்பட்டன. | 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை உரிய திகதியில் சமர்ப்பிக்க முடியவில்லை, ஏனெனில் முன்னாள் பெண் கணக்காளர் பல குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு, 28 யூலை 2018 அன்று சேவையில் இருந்து நீக்கப்பட்டார் மற்றும் முன்னாள் பணிப்பாளர் சேவையும் நிறுத்தப்பட்டது. | பொதுதொழில் முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் படி வருடாந்த நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 02 யூன் 2003 திகதியிட்பட்ட பிஈடி/ 12 ஆம் இலக்க பொதுதொழில் முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பந்தி 5.1.2 படி, நிறுவனத்தின் நிறுவன அமைப்பு, பலங்கள், பலவீனங்கள், புறக்காரணிகளின் அச்சுறுத்தல்கள் மற்றும் SWOT பகுப்பாய்வு, எதிர்பார்க்கப்படும் இலக்குகள் உள்ளிட்ட கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். இது சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் அடையப்பட வேண்டி இருந்த மற்றும் இது தொடர்பாக செயல்படுத்தப்படும் தந்திரோபாயம் ஆண்டுதோறும் நாளதுவரையாக்கப்படல் வேண்டும். இருப்பினும் 2016 தொடக்கம் 2020 வரையிலான காலப்பகுதியில் மருத்துவனை தயாரித்த கூட்டிணைப்புத் திட்டம் அத்தகைய தேவைகளுக்கு இணங்கவில்லை. மேலும் இது 2018 ஆம் ஆண்டிற்காக நாளதுவரையாக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்ககவில்லை. | தொடர்புடைய சுற்றறிக்கைகளின் அறிவுறுத்தல்களின்படி கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |